1982 செப்டம்பர் 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

இந்த 3 மாதகாலம், போதும ? நோட்டீஸ் கொடுக்க வேண்டாமா? மேலும் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கின்றன. 1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு கிடைக்கப் பெறவேண்டும். ஆகவே, டிசம்பர் மாதத்திற்குள் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவோம் என்பதை திட்டவட்டமாக இந்த மன்றத்தின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்களுக்கு அறிவிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் அடிப் டையிலே தான் நாம் ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் அடிப்படையில் இன்னும் ஒதுக்கீடுகளைச் செய்வது சரியாக இருக்காது. 1981 ஆம் ஆண்டு கணக்கு நமக்கு இன்னும் வந்து சேரவில்லை. இந்திய அரசின் மூலம் அது நமக்கு வரவேண்டும். அது அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில்தான் வந்து சேரும்போல் தெரிகிறது. அந்தக் கணக்கு வந்தபிறகு, மேற்கொண்டு செய்ய வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டு, தேர்தலை நடத்த வேண்டும். ஆகவே, இந்திய அரசு சீக்கிரமாக 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கை அனுப்பி வைத்தால் நாம் இந்தக் காலக் கட்டத்திற்குள் தேர்தலை நடத்த தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க துணைத் தலைவரவர்களே, நான் மீண்டும் கேட்க விரும்புகிறேன். முதலிலே டிசம்பர் மாதம் என்று சொன்னார்கள். இப்போது அக்டோபர், நவம்பர் என்று கொஞ்சம் கொஞ்சமாகத் தள்ளுகிறார்கள். டிசம்பர் மாதத்தில் தேர்தல் நடக்குமா என்பதை திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுகிறேன்.

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து, அம்மற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982 ம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, நான் கீற்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.